2015 செப்டம்பர் 2]

கருத்துப்படி, அடுத்த மூன்று வருடங்களில் இரு மடங்காக உயரும். அதற்கு இந்த நான்கு துணை மின் நிலையங்களும் உபயோகமாக இருக்கும் என்பதைத் தங்களது மேலான பார்வைக்குக் கொண்டுவர விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அங்கேயிருக்கின்ற உச்சபட்ச மின் பளு 18.7 M.V.A.-தான். ஏறத்தாழ 13.3 M.V.A. திறன் அளவிற்குக் கூடுதலாக மின் வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த மின் வசதியைப் பயன்படுத்திக்கொள்ளும் அளவிற்குத் தொழில்கள் அந்தப் பகுதியிலே வருவதற்குக் குறைந்தது இன்னும் 5 ஆண்டுகள் ஆகும். திறன் கூடுதலாக உள்ள இந்த 13.3 M.V.A. மின் பளுவைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் புதிதாகத் தொழில்கள் வருவதற்கு இன்னும் சற்று காலம் ஆகும். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே இருக்கின்ற துணை மின் நிலையங்களிலே, தேவை ஏற்படுகின்றபோது, நிச்சயமாக இருக்கின்ற மின் மாற்றிகளை மாற்றி, அந்தத் துணை மின் நிலையத்தினுடைய திறன் மேம்படுத்தப்படும் என்பதை மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 198, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

198—

தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகம்

***53702—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2015 செப்டம்பர் 2

வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடியில் தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாவட்டத் தலைநகரங்களில் மட்டும்தான் தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகங்களுக்கான சொந்தக் கட்டடம் கட்டுவது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடியில், தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவது தொடர்பாக தற்போது நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதி என்று வந்தோருக்கு கருணைக் கடலாய், கன்னித் தமிழ் காத்திட்ட கார்முகிலாய், அஞ்சாத சிங்கமாய், ஆர்ப்பரிக்கும் அன்னையாய், (மேசையைத் தட்டும் ஒலி) எழுச்சி சகாப்தம் படைக்கும் எங்கள் அம்மா அவர்களே, கனிவும், கம்பீரமும் கலந்துவிட்ட எங்கள் காவியத் தாயே, தனக்காக வாழாமல் தமிழக மக்களுக்காக வாழ்ந்து வரும் எங்கள் தமிழர் குலச் சாமியே, வளம் கொண்ட நாட்டுக்கு வறுமை தந்த அரசியலை சுத்திகரிப்பு செய்திடவே சூளுரைக்கும் சுடரொளியே, சாதிப் பகையும், மதப் பகையும் இல்லாத சமத்துவ தேசம் காண சங்கத் தமிழ் பூமி தந்த சத்தியத் தாயே, பார் காக்கும் பாற்கடல் பரந்தாமன், தேன் தமிழ் தேசம் வழியே தமிழகம் காத்திட பரிவோடு படைத்திட்ட திராவிடத்துத் திருமகளே, திருவரங்கத்து சீதையே, (மேசையைத் தட்டும் ஒலி) ஆர்.கே. நகரின் அதிசயமே, ஈரடியால் உலகளந்த இறைவன் ஈரிலையால் தேசமதை ஈர்ந்திட்ட பேரறிவுப் பெரியாரே, ஈகையின் இயக்கமாகி, வாகையே இலக்காகி, அன்பை அறமாக்கி, ஆற்றலை ஆயுதமாக்கி, அரசாட்சி நடத்தி வரும் பெறற்கரிய பேறே, செயற்கரிய செயல் யாவும் செய்து சிறக்கும் எங்கள்

2015 செப்டம்பர் 2]

செந்தமிழ் நாட்டின் சேகுவாராவே, பன்மொழிப் புலவர், முத்தமிழ் வித்தகர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி பணிவுடன் வணங்குகிறேன்.

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதியில் தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகம் தற்போது மிகச் சிறிய வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட ஆய்வாளர் அலுவலகத்தில் தற்பொழுது 6 அரசு அலுவலர்கள் மட்டுமே பணிபுரிந்துவருகிறார்கள். வாணியம்பாடி தொகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட தோல் தொழிற்சாலைகளும், பீடித் தொழிற்சாலைகளும், பொது விநியோகக் கடைகளும், எரிவாயு சிலிண்டர் வழங்கும் ஏஜென்சிகளும் மற்றும் உணவு விடுதிகளும் உள்ளன. மேற்கண்ட நிறுவனங்களில் பணிபுரியும் பல்வேறுதரப்பட்ட தொழிலாளர்களும் ஆய்வாளர் அலுவலகத்திற்கு வந்து செல்வதற்கு அங்கு போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், இதை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, வாணியம்பாடியில் தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகத்தைக் கட்டித் தர வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள், தொழிலாளர் நலன் காக்க வேண்டி எக்காலத்திலும் இல்லாத வகையில், வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டுக் கொண்டிருந்த மாவட்ட தொழிலாளர் அலுவலகங்களில், 20 மாவட்ட அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் அமைக்கப்பட வேண்டுமென்று 54.49 கோடி ரூபாயை அனுமதித்திருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, வாணியம்பாடி தொகுதியினை உள்ளடக்கிய வேலூர் மாவட்டத்தின் தலைநகரான வேலூரில், தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் தொழிலாளர் நலத் துறையைச் சார்ந்த 12 அலுவலகங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலகத்தை 4.20 கோடி ரூபாயில் பொதுப் பணித் துறையின்மூலம் கட்டுவதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதை மெத்த மகிழ்வோடு இந்த அவைக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.